
கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்
www.newwisdomministries.com
ஞானம் 5 - ஒலி 33 | 14-08-2022



# ஐயா, நன்றிங்கய்யா...



## தலையங்கம்

# சுதந்திரம் கொண்டாடுவோம்

அருட்பணி. **சைமன் பீட்டர்**

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர, சகோதரிகளே வணக்கம். உங்கள் அனைவருக்கும், இந்திய திருநாட்டின 75வது சுதந்திர திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தாண்டு சுதந்திர திருநாள், ஒரு பவள விழா என்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் மக்கள் என்ற பெருமையை நாம் பெற்றிருப்பது கிடைத்தற்கரிய மாண்பு.

இந்த இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்ட அனைத்து முன்னோர்களை நாம் நன்றியுடன் நினைத்திருப்போம். அவர்கள் விட்டுச் சென்ற அந்த நாட்டுப்பற்றையும் உயிரென போற்றிப் பாதுகாப்போம். நம் இந்தியாவை உலகரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வைக்க நாம் சூழுரைப்போம். அதற்காக நாம் அல்லும் பகலும் நமது பங்களிப்பை வழங்கிக் கொண்டேயிருப்போம்.

இந்த சுதந்திரத்தை நமது முன்னோர்கள் சதாரணமாக, சுலபமாக பெற்றுவிடவில்லை. அவர்கள் கடந்துவந்த பாதை இரத்தமும், வலிகளும், அவமானங்களும், பேரிழப்புகளும் நிறைந்த பாதை. அவர்களின் இந்தப் பாடுகளால்தான் நாம் இன்று அந்த சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அதுபோல நமது சந்ததியினர், இந்த சுதந்திரத்தை மேலும் மாண்போடு அனுபவிக்க, இன்று நமது பங்களிப்பை மனமுவந்து வழங்கிட முன்வருவோம். அது நம் தலையாயக் கடமை என்பதை மனதில் பதியவைப்போம்.

இந்தியாவில் மொத்தம் 28 மாநிலங்கள், மற்றும் 8 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. இவற்றிலெல்லாம் இல்லாத மாண்பும், வளர்ச்சியும் தமிழ்நாட்டில்தான் உண்டு. கல்வி, கலாச்சாரம், பண்பாடு, மொழி, பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு, சமூக நல்லணக்கம் போன்றவற்றில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடுதான் மிக முன்னேறியுள்ளது. பல மாநிலங்கள் 50 வருடங்களுக்கு பின்னால் உள்ளது என்பதை மறுக்க முடியாது.

அதற்குக் காரணம் திராவிட சித்தாந்தமே என்பது மிக முக்கியம். மதத்தின் அடிப்படையிலும், ஜாதியின் அடிப்படையிலும், அடிமைப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு, இந்தத் தமிழ் சமூகம் படுபாதாளத்தில் அடிமைப்பட்டுக் கிடந்தது.

சனாதனம் இந்தச் சமூகத்தைச் சிதைத்து, அந்தச் சிதையின் மேல் உல்லாசமாய் வாழ்ந்து வந்தது. உயர் சாதியினர் மட்டுமே வாழத் தகுதியுடையோர் எனவும், மற்ற சூத்திர சாதியினர், மூத்திரச் சட்டிக்குச் சமமானவர் என்ற சமூக அநீதி தலைவிரித்தாடியது.

சூத்திரர்கள் அனைவரும் இடுப்புக்கு மேலேயும், முழங்காலுக்கு கீழேயும் உடை உடுத்தக் கூடாது. உயர்குலத்தார் வந்தால் ஆண்கள் கைகளை கட்டிக் கொண்டு கீழே குனிந்து நிற்க வேண்டும், பெண்கள் கைகளை பின்பக்கம் கட்டிக் கொண்டு தலையை பின்பக்கம் வளைத்து வானத்தைப் பார்த்து நிற்க வேண்டும் என்ற கொடுமை நடந்து வந்தது.

வக்கிரப் புத்திக்காரன் நாட்டாமை செய்தால், அது பேத்தனமாய்தான் இருக்குமல்லவா?

அந்த சீர்கேட்டை, அநீதியான அமைப்பை அழிப்பதற்காகப் பிறந்த பகலவன்தான் தந்தை பெரியார். அவர் யாருக்கும் எதிராக இருந்தவரல்ல. அடித்தட்டு மக்களுக்காக பாடுபட்டவர், மேல்சாதியான பார்ப்பன சமூகத்தில் அடிமைப்பட்டுக்கிடந்த பார்ப்பனப் பெண்களின் விடுதலைக்காகவும் பாடுபட்டார் என்ற செய்தி, அவர் மானிடத்தின் மாண்பைக் காக்கவே பாடுபட்டார், யாருக்கு எதிராகவும், யாரையும் அழிக்க வேண்டும் என்ற பாசிச புத்தி கொண்டவரல்ல.

மக்களை அடிமைப்படுத்திய வர்ணசிரம அமைப்பையும், அதனடிப்படையில் அமைக்கப்பட்ட சமூக செயல்பாடுகளையும் அவர் அழிக்கவே பாடுபட்டார். அதற்கு துணையாயிருக்கும் மதச் சிந்தனையையும், போதனையையும் அழிப்பதே அவரது நோக்கமாயிருந்தது. மனித குலம் வாழ்வு பெற தடையாயிருந்த அனைத்தையும் அழிக்கவே அவர் போராடினார்.

அவரின் பாடுகளால்தான் இன்று தமிழகம் ஜாதி ஏற்றத்தாழ்வற்ற சமூகமாக உலகில் எழுந்து நிற்கின்றது. அது முற்றிலுமாக அகற்றப்படவில்லை என்றாலும், சனாதனத்தின் கொடுக்கு பிடுங்கப்பட்டுவிட்டது.

ஜாதியமைப்பு குற்றுயிரும், கொலையுயிருமாக இருப்பதுதான் இன்றைய எதார்த்த நிலை.

பெரியார் அவர்கள் இறந்து 48 ஆண்டுகளுக்குப் பிறகும், இந்து முன்னணியின் கலை இலக்கியத்தின் மாநில பொறுப்பாளர் கனல் கன்னன் போன்றோர், திருவரங்கக் கோவிலுக்கு முன் வைக்கப்பட்டுள்ள பெரியார் சிலையை அகற்றுவதே இந்து எழுச்சி என்று மதுரவாயில் என்ற இடத்தில் பேசிய அவாவின், அடிதடி எடுபுடி இப்போது ஓடி ஒழிந்து கொண்டிருக்கும் அளவுக்கு பெரியார் அவர்கள் இன்றும் கனன்றுகொண்டிருக்கின்றார் என்றால், பெரியார், ஆதிக்க சக்திக்கு எப்போதும் எரிதழலாகவே இருக்கின்றார். கனல் கன்னன் போன்றோருக்காகவும்தான் பெரியார் அவர்கள் பாடுபட்டார். அதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பெரியாரின் இந்து சனாதனத்திற்குஎ எதிரான வெறியும், மதத்தின் பெயரால் நடக்கும் அட்டூழியத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கமும், காசியில்தான் உருப்பெற்றது.

பெரியாரும், அண்ணாவும், காசிக்குச் சென்று பிச்சை எடுத்து பிழைக்க வேண்டிய சூழலில், மதத்தின் பெயரால் காசியில் நடந்த அட்டூழியங்களைப் பார்த்த பிறகுதான் பெரியார், இந்துமதத்தில் நடக்கும் அநியாயங்களை அழிக்க வீருகொண்டெழுந்தார்.

அவரின் சித்தாந்தமும், எழுச்சியான பேருரைகளும், காந்தியின் கவனத்தைக் கவர்ந்தது. அதன்பிறகு பெரியாருடன் அவர் கொண்டிருந்த நட்பு மிகவும் ஆழப்பட்டது. எந்த முடிவாக இருந்தாலும் காந்தியடிகள் பெரியாரிடம் ஆலோசனை கேட்டபிறகே எதையும் எடுபார் என்பது வரலாறு.

மதுவிலக்கைக் கொண்டுவரலாமா? என்று பெரியாரிடம் கேட்டவுடன், சம்மதம் தெரிவித்த பெரியார் அவர்கள், அதற்கு ஆதரவாக முதலில் அவர் செய்த வேலை என்னவென்றால், சேலத்தில் அவருக்குச் சொந்தமாயிருந்த தென்னந்தோப்பில், கள் எடுப்பதை நிறுத்தியதோடு, அங்கிருந்த 4000 தென்னை மரங்களை அடியோடு வெட்டிச் சாய்த்தார் என்றால், அவர் எவ்வளவு உண்மையான இலட்சிய வீரராக இருந்தார் என்பது தெளிவாகிறது.

இதுவரை, மக்களை ஜாதி அடிப்படையில் மக்களைப் பிரித்து, அடிமைப்படுத்தி, அவர்களின்மீது சவாரி செய்து பிழைத்துக் கொண்டிருந்த பார்ப்பன சமூகம் , தங்களின் வசதிகள், ஆதாயங்கள், பெருமைகள். மதிப்புகள் அழிந்ததே என்று ஆதங்கத்தில் அன்றிலிருந்து இன்றுவரை பெரியாரை அழிப்பதே ஒரே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றார்கள்.

மைக்ரோ மைனாரிட்டியான பார்ப்பன சமூகம், இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து அறுபது சதவீதத்துக்கும் மேலாக அரசாங்கத்தில்

அதீத ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். அவர்கள் எப்போதும் நேரடியாகக் களமிறங்க மாட்டார்கள். இந்து எழுச்சி என்று பேசுகின்ற இப்படி தூண்டிவிடப்பட்ட, அவர்களின் தூண்டிலில் சிக்கிய சூத்திரர்களையே பயன்படுத்துவார்கள்.

இதேபோன்ற ஒரு சதிச் செயலில் நம் தந்தை பெரியார்களுக்கு அதே திருச்சியில் அன்று நடந்த மிகப் பெரிய கொடுமையை நாம் கேட்டிருப்போம். இல்லையென்றால், இப்போது தெரிந்து கொள்வோம்.

திருச்சியில் அடித்தட்டு மக்களுக்கு கல்வியைத் தரும் பள்ளிகளும், கல்லூரிகளும் இல்லை. அப்படிபட்ட நாட்களில் அவர் திருச்சியில் கலந்து கொள்வதற்காக பெரியார் அவர்கள் அங்கு சென்றார்.

இனிவருதைப் படிக்க உங்கள் மனதை கடினமாக்கிக் கொள்ளுங்கள்.

பெரியார் அவர்கள் அன்று ஒரு சாலையில் போய்க் கொண்டிருக்கும்போது, சனாதனக் கைகூலிகள், ஒரு பானையில் நிரம்ப ஒருவாரம் சேமித்து வைத்திருந்த மனித மலத்தை ஒரு வீட்டின் மாடியிலிருந்து பெரியாரின் தலைமீது போட்டு உடைத்தார்கள்.


பெரியாரின் தலைமுதல் உடல் முழுவதும் மலம். ஒருவார மலம் கெட்டுப்போய், பயங்கர நாற்றும். அப்போது அவரின் மனைவி அவரை சுத்தம் செய்து கொண்டே, உங்களுக்கு ஏன் இந்தப் பிரச்னை, பாருங்கள் எப்படி நாறுகிறது என்று சொன்னாராம். அப்போது.....

தந்தை பெரியார் அவர்கள், என் மக்களின் வாழ்க்கை இதைவிட மோசமாக நாறிக்கொண்டிருக்கின்றது. அதிலிருந்து அவர்களை முதலில் நாம் மீட்டெடுக்க வேண்டும் என்றாராம்.

ஐயா, உங்களின் பாதங்களில் எங்கள் நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்பார்ந்தவர்களே, நாம் பெற்ற சுதந்திரம், ஜாதிய விடுதலை, ஐயா போன்றோரின் அவமானங்களின் மீது கட்டப்பட்டுள்ளது. அவர்களின் தியாகங்களை நாம் என்றும் நினைத்துப் பார்த்து நன்றியுடன் வாழ்வோம்.

தமிழ் மண்ணே வணக்கம். தமிழ்த்தாய வாழ்க. தமிழர் நலன் பெருகுக.



# விவிலியம் அறிவோம் – 51



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## யாக்கோபின் இறப்பும் அடக்கமும்

தொடக்க நூல் 49 வது பிரிவு யாக்கோபு அவருடைய புதல்வர்களிடம் பேசுவதையும், அவர்களுக்கு அளிக்கும் ஆசிரையும் உள்ளடக்கமாகக் கொண்டது. விவிலியத்தில் குலமுதுவர்களின் ஆசிர், அவர்களின் புதல்வர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கும். குறிப்பாக, அவர்கள் வாழுகின்ற நிலப்பரப்பின் செழுமை, குடும்பங்களின் பெருக்கம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உறவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். குலமுதுவர் கூறுகின்ற ஆசீராக இருந்தாலும் சாபமாக இருந்தாலும் அவை மிகவும் முக்கியமானதாக பார்க்கப்பட்டது. அவை கடவுளிடமிருந்து வருகின்ற இறைவாக்குகளுக்கு இணையானதாகக் கருதப்படாவிட்டாலும்,தவிர்க்க முடியாத ஒன்றாக, முக்கியமானதாகக் கருதப்பட்டது. தொநூ 49 வது பிரிவை பல சிறுசிறு கவிதைகளைக் கொண்ட ஒரு கவிதைத் தொகுப்பு எனக் கூறலாம். ஒவ்வொரு கவிதையும் யாக்கோபின் புதல்வர்களில் ஒருவருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றையும் ஒரு உயில் எனக் கூறலாம். யாக்கோபு இறப்பதற்கு முன் இறுதியாக பேசப்படும் வார்த்தைகள் என்பதால் இவை மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

இப்பாடத்தில் யாக்கோபு தனது மகன்களுக்குப் பேசுவதும் மகன்களைப் பற்றிப் பேசுவதும் மாறிமாறி வருகிறது. யாக்கோபு முதலில் லேயாவின் ஆறு புதல்வர்களுடனும் பேசுகிறார்; அவர்களுக்கு ஆசிர் தருகிறார். அதன்பின் அவரது மறுமனைவியரான பில்கா மற்றும் சில்பாவின் புதல்வர்களைப் பற்றிப் பேசி அவர்களை ஆசிர்வதிக்கிறார். இறுதியாக அவர் அதிகமாக அன்புசெய்த மனைவியான ராகேலின் புதல்வர்களான யோசேப்பையும் பென்யமினையும் பற்றிப் பேசி அவர்களுக்கு ஆசிர் வழங்குகிறார். யோசேப்பும் பென்யமினும்தான் அனைவரிலும் இளையவர்கள். யோசேப்பின் இரு புதல்வர்களை யாக்கோபு தனது புதல்வர்களாகத் தத்தெடுத்தாலும் அவர்களை இந்த இறுதி ஆசிரில் இணைக்கவில்லை. யாக்கோபின் இறுதி வார்த்தைகள் ஒரு சில புதல்வர்களின் கடந்த கால வாழ்க்கையையும்



தொடர்புபடுத்துகிறது. ஒரு சிலரைப் பொறுத்தவரையில் அவர்களின் குலங்கள் வாக்களிக்கப்பட்ட நிலத்தில் குடியேறியபிறகு வாழ்ந்த வாழ்க்கையோடு தொடர்புடையதாகத் தெரிகிறது. ரூபன் தலைமகனாக இருந்தாலும் தந்தையின் கண்டனத்திற்கு ஆளாகிறான். ஏனெனில் அவன் தந்தையின் மறுமனைவியான பில்காவுடன் உடலுறவு கொண்டான் (தொநூ 35:22). வரலாற்றைப் பார்க்கும்போது ரூபன் குலந்தவர் வெகு விரைவில் மறைந்துபோயினர். இரண்டாவது மற்றும் மூன்றாவது மகன்களான சிமியோனும் லேவியும் இணைத்துப் பேசப்படுகின்றனர். அவர்களையும் யாக்கோபு கண்டனம் செய்கிறார்; ஏனெனில் அவர்கள் கோபவெறியால் செக்கேமின் மக்களைக் கொன்று குவித்தார்கள் (தொநூ 34). அவர்கள் இஸ்ரயேலில் நின்று பிரிந்துபோவார்கள் என யாக்கோபு முன்னுரைக்கின்றார். வரலாற்றைப் பார்க்கும்போது சிமியோன் குலம் யூதா குலத்துடன் இணைந்து மறைந்துபோனது. லேவியர்

குலம் குருக்களாகப் பணிசெய்ததால் அவர்களுக்கென ஒரு நிலப்பரப்பு இல்லாமல் போனது.

முதல் மூன்று மகன்களையும் யாக்கோபு அவர்களின் தவறுகளுக்காகக் கண்டனம் செய்கிறார். நான்காவது பிறந்த மகனான யூதா ஆசிர்வதிக்கப்படுகிறார். தலைமகனுக்குரிய சிறப்புகள் யூதாவிற்கு கொடுக்கப்படுகின்றன. யாக்கோபு யூதாவிற்கு அளிக்கும் ஆசிர் பிற்கால வரலாற்றில் யூதா குலத்திற்கு கிடைக்க இருக்கின்ற பெரிய முக்கியத்துவத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது. முக்கியமாக, உன் கை உன் எதிரிகளின் கழுத்தில் இருக்கும் என்ற சொற்றொடர் யூதா பகைவர்களின் மேல் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டையும், அவர்களை அடக்கியாள்வதையும் குறிக்கும். திராட்சை இரசத்தில் தன் உடையையும் திராட்சைச் சாற்றில் தன் மேலாடையையும் தோய்த்திடுவான் என்ற வரிகள் பிற்காலத்தில் யூதா குலம் மிகவும் செழுமையானதாக இருக்கும் என்பதைக் குறிக்கிறது. திராட்சை இரசம் மிகவும் அதிகமாகக் கிடைப்பதால் உடைகளை அதில் துவைப்பார்கள் என்பதாக உள்ளது. இவ்வாறு யூதா அதிகாரம் கொண்டவராக விளங்குவார் என யாக்கோபு கூறுகிறார். வரலாற்றைப் பார்க்கும்போது யூதா குலத்தினர் அரசாட்சியில் தொடர்ந்து இருந்தார்கள். கி.மு. 722 இல் அசீரியர்களால் வடபகுதி அரசான பத்து குலங்களைக் கொண்ட இஸ்ரயேல் வீழ்ச்சியடைந்த பிறகும் யூதா தொடர்ந்து ஆட்சியில் இருந்தது. யூதாவை ஆசிர்வதித்த பின் லேயாவின் ஆறாவது மகனான செபுலோனைப் பற்றி யாக்கோபு பேசுகிறார். அவரை ஆசிர்வதிக்கிறார். செபுலோன் கடற்கரையை ஒட்டி வாழ்வான் என முன்னுரைக்கிறார். வரலாற்றைப் பார்க்கும்போது செபுலோன் குலத்தவர் நாட்டின் உள்பகுதியில்தான் வாழ்ந்தனர். ஒருவேளை அவர்கள் கடற்கரையோரம் பணிபுரிந்திருக்கலாம். ஐந்தாவது மகனான இசக்காரைப் பற்றிப் பேசும்பேது அவனின் குலம் அடிமைகளாக வாழ்வர் என முன்னுரைக்கிறார்.

யாக்கோபின் முதல் மனைவியான லேயாவின் புதல்வர்களைப் பற்றிப்பேசி அவர்களை ஆசிர்வதித்தபின் யாக்கோபு அவரது மறுமனைவியரான பில்கா மற்றும் சில்பா பெற்றெடுத்த புதல்வர்களைப் பற்றிப் பேசி அவர்களை ஆசிர்வதிக்கிறார். தாண் என்ற பெயர் எபிரேய மொழியில் நீதி அரசர் என்ற சொல்லுடன் தொடர்புடையது. தாண் குலம் மக்களுக்கு நீதி வழங்குகின்ற குலமாக, எதிரிகளை விரட்டுகின்ற குலமாக இருப்பர் என முன்னுரைக்கின்றார். காத்து தனது பகைவர்களுக்கு எதிராகப் போராடி வெற்றிபெறுவார் என்கின்றார். வரலாற்றைப் பார்க்கும்போது காத்து குலம் யோர்தான் ஆற்றின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்தனர். அப்பகுதியில் வாழ்ந்த பிற இன மக்களுக்கெதிராகப் போரிட்டு வென்றனர். ஆசேர் குலம் மிகவும் செழிப்பு வாய்ந்த வடமேற்கு கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த பகுதி விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலப்பகுதி. நப்தலி ஒரு பெண் விலங்கிற்கு ஒப்பிட்டு பேசப்படுகிறார். அழகிய மான்குட்டிகளை ஈனும் கட்டவிழ்ந்த பெண்மான் என்ற சொற்றொடர் தெளிவற்றதாக உள்ளது. இறுதியாக யாக்கோபு அவரால் அன்புசெய்யப்பட்ட மனைவியான ராகேலின் புதல்வர்களைப் பற்றிப் பேசி அவர்களை ஆசிர்வதிக்கிறார். யோசேப்பு பற்றி யாக்கோபு குறிப்பிடும் வார்த்தைகள் அதிகமாக உள்ளன. அவற்றை யூதாவுக்குக் கூறிய வார்த்தைகளோடு ஒப்பிடலாம். ஒரு சில வார்த்தைகளின் பொருள் தெளிவாக இல்லை. இறைச்சொற்றொடர்கள் 25-26 இல் குழந்தைகளும் நிலமும் ஆசிராகக் கொடுக்கப்படுகின்றன. பென்யமினைப் பற்றிப் பேசுகையில் அவன் வெற்றிபெறுகின்ற போர் வீரனாக இருப்பான் என்கிறார். தொடக்க நூலில் நாம் சந்திக்கின்ற பென்யமின் இந்த ஒப்புமைக்கு ஈடானவனாகத் தெரியவில்லை. ஆனால் பென்யமின் குலம் வடபகுதியில் வாழுகின்ற குலங்களையும் தென்பகுதியில் வாழுகின்ற குலங்களையும் இணைக்கின்ற இடத்தில் வாழ்வதாகப் பார்க்கிறோம்.

தனது புதல்வர்களை யாக்கோபு ஆசிர்வதித்த பின் அவர் இறக்கும் தருவாயில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இறப்பதற்கு முன் யாக்கோபு கூறுகின்ற இறுதி வார்த்தைகள் தனிப்பட்ட முறையில் ஏற்கனவே யோசேப்புக்கு கூறிய வார்த்தைகளாக உள்ளன. அவர் இறந்தபின் அவரது குடும்பத்திலுள்ள முன்னோர்களை அடக்கம் செய்த மக்பேலா குகையில் அவரையும் அடக்கம் செய்யவேண்டும் என கூறுகிறார் (தொநூ 47:29-31). முதலில் யோசேப்புக்கு மட்டும் இச்செய்தியைக் கூறியிருந்தார். இப்போது எல்லா புதல்வர்களுக்கும் அந்தச் செய்தியைக் கூறுகிறார். இதைக் கூறியபின் யாக்கோபு இறக்கிறார். அவரது கண்களை மூடிய யோசேப்பு அவரது உடலை மருத்துவ முறையில் பாதுகாப்புச் செய்யும்படி தம் பணியாளர்களான மருத்துவர்களுக்கு கட்டளையிடுகின்றார். அவர்களும் அவ்வாறு செய்கின்றனர். பண்டைய இஸ்ரயேலில் உடலைப் பாதுகாப்பு செய்வது வழக்கமில்லை. அதற்கு மாறாக எகிப்து நாட்டில் செல்வந்தர்கள் இறந்தபிறகு மருத்துவ முறைப்படி உடலைப் பாதுகாப்பது வழக்கம். யாக்கோபின் விருப்பப்படி அவரது உடலை எபிரோனுக்குக் கொண்டு செல்வதற்காக அவரது உடல் மருத்துவ முறைப்படி பாதுகாக்கப்படுகிறது. மருத்துவ முறையில் உடலைப் பாதுகாப்பு செய்வது ஒரு சடங்கு போன்றது. இதை சவக்கிடங்குகளில் பணிசெய்கின்ற பயிற்சிபெற்ற குருக்கள் செய்வது வழக்கம். இதற்கு உள்ளுறுப்புகள் சிலவற்றை நீக்கவேண்டும். மேலும் உடலை நாற்பது நாட்கள் மருத்துவத் திரவங்களில் வைத்திருக்கவேண்டும். எகிப்தியர்கள் இறந்தபிறகும் அவர்களின் ஆன்மா தங்குவதற்காக உடலைப் பாதுகாத்து வைக்கவேண்டும் என நம்பினார்கள். யோசேப்பு இறந்தபோதும் அவரது உடல் மருத்துவ முறைப்படி பாதுகாக்கப்பட்டது.

யாக்கோபின் இறப்பிற்கு எகிப்தியர் எழுபது நாள்கள் துக்கம் கொண்டாடினர் என கூறப்படுகிறது. பொதுவாக ஒருவர் இறக்கும்போது முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடப்பட்டது. உடலை மருத்துவ முறையில் பாதுகாப்பதற்கு நாற்பது நாட்கள் தேவைப்பட்டதால. அந்த நாள்களும் துக்கநாட்களாக அனுசரிக்கப்பட்டன. இவ்வாறு முப்பது நாள்கள் துக்கம் எழுபது நாள்களாக மாறுகிறது. எகிப்தியர்கள் எழுபது நாள்கள் துக்கம் கொண்டாடினர் எனக் கூறப்படுவது அவர்கள் யாக்கோபிற்கு கொடுத்த மரியாதையைக் காட்டுவதாகவும் உள்ளது. பொதுவாக வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவர் அங்கிருக்கும்போது இறந்துவிட்டால் அவருக்கு இத்தகைய மரியாதை கொடுப்பது வழக்கம். துக்க நாள்கள் முடிந்தபிறகு யாக்கோபின் உடல் கானான் நாட்டிலுள்ள மக்பேலா குகைக்கு அடக்கம் செய்வதற்காக கொண்டு செல்லப்படுகிறது. யோசேப்பு பார்வோனிடம் விடைபெற்று அவரது குடும்பத்தினருடன் செல்கிறார். யாக்கோபின் ஏனைய புதல்வர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் யாவரும் யாக்கோபின் உடலை அடக்கம் செய்வதற்காகச் செல்கின்றனர். அவர்களுடன் பார்வோனின் அலுவலர், குடும்பப் பெரியோர் மற்றும் எகிப்து நாட்டுப் பெரியோர் அனைவரும் செல்கின்றனர். அவர்கள் யோர்தான் நதிக்கு அப்பால் இருந்த கோரேன் அத்தத்து என்ற இடத்திற்கு வந்ததும் அங்கே ஓலமிட்டு கதறி ஒப்பாரி வைத்துப் பெரிதும் புலம்பினர். யோசேப்பு தம் தந்தைக்காக ஏழுநாள் புலம்பல் சடங்கு நடத்தினார் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கோரேன் அத்தத்து என்ற இடம் வணிகம், சட்டம் மற்றும் வாழ்க்கையோடு தொடர்புள்ள இடம் (எண் 15:20; ரூத்து 3:2; 2 சாமு 24:16-24). இந்த இடத்தைத் தேர்வு செய்து யாக்கோபிற்கு புலம்பல் சடங்கு நடத்தியது சிறப்பானதாக, அவரது பெயரை நிலைக்கச் செய்வதாகக் கருதப்படுகிறது. அதன்பின் அனைவருமாகச் சென்று யாக்கோபின் விருப்பப்படியே மக்பேலா குகையில் அவரை அடக்கம் செய்கின்றனர். அவரை அடக்கம் செய்தபின் யோசேப்பும் அவருடன் வந்தவர்கள் அனைவரும் எகிப்திற்குத் திரும்புகின்றனர்.




தந்தை இறந்தபின் யோசேப்பு தங்களைப் பழிவாங்கலாம் என அவரது சகோதரர்கள் அஞ்சுகின்றனர். யோசேப்பிற்கு அவர்கள் செய்த தீமை அவர்களை அச்சத்திற்குள்ளாக்குகிறது. எனவே யோசேப்பிடம் செய்தியனுப்பி, உம் தந்தை இறப்பதற்குமுன் உன் சகோதரர் உனக்குத் தீங்கிழைத்ததன் மூலம் உண்டான குற்றப்பழியையும், பாவத்தையும் மன்னித்துவிடு என்று யோசேப்புக்குச் சொல்லுங்கள் எனத் தங்களுக்குக் கட்டளையிட்டதாக அறிவிக்கின்றனர். மேலும் அவர்கள் தங்கள் குற்றப்பழியை மன்னித்தருள வேண்டுகின்றனர். நாங்கள் உம் அடிமைகள் எனக் கூறி அவர்முன் தாள்பணிகின்றனர். யோசேப்பு அவர்களைத் தேற்றுகிறார். அஞ்சாதீர்கள்; நான் கடவுளுக்கு இணையானவனா? எனக் கூறும் யோசேப்பின் வார்த்தைகள், ராகேல் குழந்தை கேட்டு யாக்கோபை வேண்டியபோது அவர் கூறிய பதிலை நினைவூட்டுவதாக உள்ளது (தொநூ 30:2). மேலும் மன்னிப்பு கடவுளிடமிருந்தே வருகிறது; அவரே மன்னிப்பு அளிக்கவேண்டியவர் என்ற கருத்தை வலியுறுத்துவதாவும் உள்ளது. அதன்பின் அவரது வாழ்க்கை தரும் செய்தியைக் கூறுகின்றார். நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; ஆனால் கடவுள் அதை இன்று நடப்பதுபோல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார் எனக் கூறுவதன் வழியாக மனிதர்களின் செயல்களை, அவைகள் தீமையானவைகளாக இருந்தாலும், கடவுள் தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகிறார் என்ற உண்மையைக் கூறுகிறார். யோசேப்பைப் பொறுத்தவரையில் யாக்கோபின் குடும்பத்தைக் காக்கும்பொருட்டே கடவுள் இதையனைத்தும் செய்ததாகக் கருதுகிறார். அவர்கள் அனைவரையும் பேணிக்காப்பதாக வாக்களிக்கிறார். இறுதியாக யோசேப்பு தனது சகோதரர்களிடம், கடவுள் வாக்களித்ததுபோல சொந்த நாட்டிற்கு அவர்களை கூட்டிச்செல்வார் என்றும் அப்போது அவரது உடலையும் எகிப்திலிருந்து எடுத்துச்செல்லவேண்டும் எனவும் அவர்களுக்குக் கூறுகிறார் (விப 13:19).

பயணம் தொடரும்...

Freedom is never dear at any price.
It is the Breath of Life.
What would a man not pay for living?

- Mahatma Gandhi -



# ஞாயிறு மறையுரை


## பொதுக்காலம் 20-ம் ஞாயிறு

14-08-2022

முதல் வாசகம் - எரேமியா 38:4-6, 8-10
இரண்டாம் வாசகம் - எபிரேயர் 12:1-4
நற்செய்தி வாசகம் - லூக்கா 12:49-53


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஸ்டீபன் கஸ்பார்**
பங்குத்தந்தை
திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்
காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, கடந்த வாரம் நற்செய்தியிலே நம் ஆண்டவர் இயேசு, நம் பரம தந்தை நம்பிக்கைக்குரியவர், அவர் தனது அமைதியின் ஆட்சியை, நீதியின் ஆட்சியை, மகிழ்ச்சியின் ஆட்சியை உங்களுக்கு தருவார். எனவே அஞ்ச வேண்டாம். அவருடைய திட்டம் நிறைவேறும்வரை அவரில் நம்பிக்கை கொண்டு, அச்சம் தவிர்த்து வாழுங்களென அழைத்த இறைவார்த்தையை உள்வாங்கினோம்.

ஆனால், அன்பார்ந்த இறைச் சமூகமே, இந்த வார நற்செய்தி வாசகத்திலே, மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன் எனச் சொல்லிகின்ற இயேசு, மண்ணுலகிலே அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை பிளவு உண்டாக்கவே வந்தேன் என்று நமக்கு அதிர்ச்சியூட்டுகிறார். அமைதியின் அரசர் என அழைக்கப்பட்டவர், மண்ணுலகில் அவர் தயவு பெற்றோருக்கு அமைதி என்று வானதூதர்களால் பாடி மகிழப்பட்டவர் அமைதிக்கு எதிரானவரா? இயேசுவைத் தேர்ந்து கொள்ளுகிறவர்கள் எதிர் கொள்ள வேண்டிய பிளவு இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது. இயேசுவின் நற்செய்தி எல்லாருக்கும் ஏற்புடையது அல்ல. அதைச்சிலர் ஏற்றுக்கொள்வர், பலர் ஏற்றுக்கொள்ள மறுப்பர். ஏற்றுக் கொள்ளாதவர் இயேசுவைக் குறித்து இடறல் படுவர். இந்த இடறலே அவர்களுக்குள் பிளவை உண்டாக்கிவிடும். ஒருவர் இயேசுவின்மேல் நம்பிக்கை கொள்ளும்போது, இந்தப் பிளவே அவரை இயேசுவோடு இணைக்கிறது.

ஆம் அன்பான இறைச் சமூகமே. கடவுளின் பணியாளாக விளங்கும் அனைவருக்கும் கிடைப்பது போராட்டமும், துன்பமுமே. இப்படிப்பட்ட போராட்டமும், துன்பமும் நிறைந்த வாழ்வு வாழ்ந்து கடவுளின் மிகச் சிறந்த ஊழியராக விரும்பியவர் எரேமியா. அரசர் விரும்பியதையும், மக்கள் விரும்பியதையும் கடவுள் வாக்காக எடுத்துச் சொல்லி நல்ல பெயரைச் சம்பாதித்த போலி இறைவாக்கினர்களுக்கு மத்தியிலே, கடவுளின் வாக்கை சமரசமின்றி அரசருக்கு எடுத்துரைத்தவர் இறைவாக்கினர் எரேமியா. இதன் காரணமாக துரோகி என முத்திரை குத்தப்பட்டு, பலமுறை சிறையிலடைக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, பாழுங்கிணற்றிலே, சேற்றிலே உயிரோடு கட்டி இறக்கப்பட்டார் என்பதை நாம் இன்றைய முதல் வாசகத்திலே வாசித்தோம்.

ஆம் கிறிஸ்துவின் சீடனாக வாழ்வது என்பது மலர்கள் தூவப்பட்ட பாதையல்ல, மாறாக முட்களும், ஆணிகளும் சிதறிக்கிடககும் ஒரு பாதை. துன்பமும், துயரமும், வேதனையும், சோதனைகளும், அவமானமும், அவச்சொல்லும் நிறைந்த ஒரு வாழ்வு முறையாகும். இத்தகைய வாழ்வை திறந்த மனத்தோடு ஏற்று இயேசுவோடு பயணிப்பவனே அவரது உண்மையான சீடனாவான். இதையே லூக்கா 9/23 ல்- என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்கிறார் இயேசு ஆண்டவர்.

ஆம் அவர்கூட, பாலைவனத்தில் சோதிக்கப்பட்டபொழுது, துன்பத்தைத் தவிர்த்து,


சுகபோகமாக வாழத் துணிந்திருக்கலாம். இருப்பினும், இறைவா, உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன், எனக்கூறி தந்தையை முழுமையாக நம்பிப் பணிவாழ்வில் இறங்கி, பலி வாழ்வினைச் சந்தித்து தன் குருத்துவ வாழ்வை கல்வாரியில் நிறைவு செய்கிறார். ஆம், அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்களின் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, கடவுளுக்கு உகந்தவராய் இருந்தார். எனவே, தந்தை கடவுளும் இவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் என பிலிப்பியர் 2/9ல் காண்கிறோம்.

இன்றைய நற்செய்தியிலே, இயேசு, நான் அமைதியை அல்ல பிளவையே ஏற்படுத்த வந்தேன் என்று சொல்லும்பொழுது, இப்பிளவில் இயேசுவின் பக்கம் நிற்போர் தண்டிக்கப்படுவர். அவர்கள் தங்களுடைய குடும்பத்தாராலேயே தண்டிக்கப்படுவர். ஆனால், அனைத்தையும் கடந்து இயேசுவுக்குச் சான்று பகர்பவர்களே இறையாட்சிக்குள் நுழைவார்கள் என்றும் இயேசு கூறுகிறார். ஆம் எல்லாவற்றிலும், நாம் இறைவனின்மேல் நம் கண்களைப்பதித்து இருப்போமெனில், எல்லாப் பிளவுகளும் நம்மை அவரோடு இணைத்துவிடும் என நம்பிக்கையோடு வாழுவோம்.

இன்றை சமுதாயத்தின் மிகப்பெரிய பிரச்னையே நிலைப்பாடு இல்லாத மனிதர்கள்தான். இன்றைக்கு நம்முடைய இளைய சமுதாயமோ, சமூகத் தொடர்பு சாதனங்களின் கவர்ச்சியாலேயே ஈர்க்கப்பட்டு, தவறான மாதிரிகைகளையும், கொள்கைகளையும் ஏற்றுத் தங்கள் வாழ்வை தொலைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்விலே மாற்றத்தை உருவாக்கிட நாம் உழைக்க வேண்டும். அதே வேளையில் உண்மையின் பக்கம் நிற்போர் தனித்துவிடப்பட்டுத் துன்பப்படுகிறார்கள். இனி வரக்கூடிய நாட்கள் பொல்லாதது. பல்வேறு இன்னல்கள் துன்பங்களை நாம் சந்திக்க வேண்டிய காலமாக இருக்கும். அப்படிப்பட்ட காலக்கட்டிலே நாம் இயேசுவின் பக்கமாய், உண்மையின் பக்கமாய், நீதியின் பக்கமாய் நின்று அவருக்குச் சாட்சிகளாய் வாழ்ந்து இறைவார்த்தையை வாழ்வாக்கிடுவோம்.

செபம்– எங்கள் அன்பான வாகத் தந்தையே நாங்கள், உம் அன்புத் சீடத்துவத்திலே பங்கு பெற்று உம் பாடுகள், மரணம், உயிர்ப்பு, இவற்றுக்குச் சான்று பகர்ந்து, எம் இளைய சமுதாயம் பாவ மாயையில், சமூக தொடர்பு சாதனங்களால் கவரப்படாமலும், ஈர்க்கப்படாமலும் உம் வார்த்தையின் சாட்சிகளாய் வாழ வரம் தரக் கேட்கிறோம். எம் வாழ்விலும், இளைய சமுதாயத்தின் வாழ்விலும், உம் அன்பென்ற அனல் பற்றியெரியவும், ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு நாங்கள் உம் பக்கம் நிற்கவும், உண்மை, நீதி, அன்பை உலகிற்கு பறைசாற்றிட, எங்களை உம் கரத்தில் ஒப்படைக்கிறோம். எங்களை ஆசீர்வதியும்.

– ஆமென்






# பொதுக்காலத்தின் 20-ம் ஞாயிறு

எரே. 38:4-6, 8-10, எபி. 12:1-4, லூக். 12:49-53

**14-08-2022**




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவைப் போல் துன்பத்தைத் தாங்கி, உண்மையான சமாதானத்தை வாழ்வாக்கி அதன் மூலம் இயேசுவின் உண்மையான சீடர்களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் இருபதாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இயேசுவை இழப்பதைவிட எதையும் இழக்கத் தயாராய் இருப்பவனே எதிர்ப்பிலும் இன்பம் காண்பான், துயரிலும் அமைதி காண்பான் என்ற கருத்தை வலியுறுத்துகிறது இன்றைய வழிபாடு.

இன்றைய வாசகங்கள் மேலான சீடத்துவ வாழ்வுக்கு நம்மை அழைக்கின்றன. நாம் எந்தெந்த வகைகளில் எல்லாம் கிறிஸ்துவின் சீடர்களாக வாழ முடியும் என்பது குறித்து சிந்திக்க தூண்டுகின்றன.

முட்புதரின் நடுவே எரிந்த நெருப்பு தூணில் ஒளிர்ந்த நெருப்பு, நாவின் வடிவிலே இறங்கி வந்த நெருப்பு, சவுலை பவுலாய் மாற்றிய நெருப்பு கடவுளின் பிரசன்னத்தை காட்டுகிறது. அதே நெருப்பை இறைவன் இன்று இத்திருப்பலி வழியாக ஒளிரச் செய்கிறார். இந்த நெருப்பு தாழ்ந்தோரை உயர்த்தும், நலிந்தோரை ஆற்றல் மிக்கவராய் மாற்றும்.

தீ புனிதப்படுத்துகிறது, தீ தின்று அழிக்கின்றது, தீ ஒளி கொடுக்கிறது, தீ வழி காட்டுகிறது, இப்படிப்பட்ட தீயை நம் நெஞ்சங்களில் ஏற்றிவைக்க சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ் பறவையைப் போல புதிதாய் எழ இன்று நமக்கு இத்திருப்பலி வழியாய் இறைமகன் இயேசு அழைப்புவிடுக்கின்றார்.

திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக் கொண்ட தீயை அணையாமல் பாதுகாத்து அத்தீயினை தொடர்ந்து வளர்க்க, அத்தீயின் மூலம் நம் வாழ்வை புடம் போட்டு புனரமைக்க இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இறைவாக்கினர் எரேமியா தன் சொந்த மக்களாலும், அரசியல் தலைவர்களாலும் புறக்கணிக்கப்பட்டு பாழுங்கிணற்றில் தள்ளப்படுகின்ற நிகழ்ச்சி இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. இது இறைமகன் இயேசு படவிருக்கும் பாடுகளின் முன்னறிவிப்பாக அமைகிறது. உண்மைக்கும் நன்மைக்கும் குரல் கொடுப்பவன் பல்வேறு தொல்லைகளுக்கு ஆட்பட்டாலும் மனம் தளராமல் இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்றைய கிறிஸ்துவர்கள் தங்கள் வாழ்க்கையில் சந்தித்த சவால்களை மையப்படுத்தி மன உறுதியுடனும், நம்பிக்கையுடனும் வாழ்க்கை பயணத்தில் ஓட வேண்டும் என்பதை விவரிக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். மன உறுதியுடன் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தும்படி தூண்டும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும், அதை நிறைவு செய்பவருமான தந்தையே இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். உம் திருமகன் இயேசு ஏற்றி வைத்த நெருப்பை தம் கரங்களில் ஏந்தி பாவ இருள் அகல அயராது உழைத்திடவும், இறைவாக்கினர் எரேமியாவைப் போல சான்று பகர்ந்து வாழ்ந்திடவும் அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் நிறைவாக தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) அன்பும் இரக்கமும் கருணையும் கொண்ட தந்தையே இறைவா, எங்களது குடும்பத்தில் உடல் நலமின்றி இருக்கும் ஒவ்வொருவரையும் உமது வல்லமையுள்ள திருக்கரத்தால் தொட்டு குணப்படுத்தும். நோயால் அவர்கள் படும் வேதனைகளில் இருந்து முற்றாக அவர்களை விடுவித்தருளும். அவர்களது உள்ளங்களுக்கு ஆறுதலை தந்து, அவர்கள் உம்மீது கொண்டுள்ள நம்பிக்கையில் ஒருபோதும் தளர்ச்சி அடையாமல் இருக்க அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அழைத்தலின் ஆண்டவரே இறைவா, அருட்பணியில் ஆர்வமும், துறவறத்தில் நாட்டமும், தளராத மனமும் கொண்டுள்ள இளைஞர்களையும், இளம் பெண்களையும் நிறைவாக ஆசீர்வதியும். தேவ அழைத்தலில் அவர்கள் உறுதியுடன் நிலைத்து நிற்கவும், உமது மறை உடலாகிய திருச்சபைக்கு அணிகலனாகத் திகழவும், உலகின் உப்பாகவும், ஒளியாகவும், வாழ்வாகவும் விளங்கவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) தன்னலமற்ற தலைவராம் அன்பு இறைவா, எங்கள் நாட்டை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். அவர்கள் சுயநலம் துறந்து லஞ்சம் தவிர்த்து பொது நலத்தோடும், நடுநிலையோடும், நேர்மையோடும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு செயல்பட அவர்களுக்கு நல்ல மன நிலையையும், மன உறுதியையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

### திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்



**கன்னி வயிற்றில் உதித்தோனே**
**கருணையை உலகில் விதைத்தோனே**



அன்னை கன்னி மரி வயிற்றில் இம்மண்ணுலகில் பிறந்தவளே! அருளை இவ்வுலகில் பரவலாக விதைத்தவரே!



# புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு & இந்திய விடுதலை நாள்

**15-08-2022**

தி.வெ. 11:19, 12:1-6, 10,
1 கொரி. 15:20-26, லூக்கா 1:39-56




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


*மாசில்லா மாமரியாய்*
*முள்ளில்லா மென்மலராய்*
*முப்போதும் கன்னிகையாய்*
*முடிவில்லா விண்மணியாய்*
*பாசத்தின் பூங்கொடியாய்*
*பரவசத்தின் கோகிலமாய்*
*பாவத்தின் சிரகறுத்து*
*பகை வென்ற பூமகளாய்*
*மோட்சத்தின் நாயகனை*
*முன்மொழிந்த நாயகியாய்,*
*பேரரசன் தாவீதின்*
*பாரளந்த சாசனமாய்*

*அகிலங்கள் தோன்றுமுன்னே*
*அவதரித்த ஓவியமாய்*
*ஆதாமின் தலைமுறைகள்*
*அகமகிழும் காவியமாய்*
*வையகமும் வானகமும்*
*சங்கமிக்கும் சாகரமாய்*
*வைகறையின் உதயம் போல்*
*வடிவெடுத்த பேரழகாய்*

இந்த அவனியில் அவதரித்த நம் அன்னை மரியாளின் விண்ணேற்பு பெருவிழாவினையும், நம் தாய் திருநாட்டின் விடுதலை நாளையும் கொண்டாடி மகிழ ஆர்வமுடன் வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

மரியாள் - இவள் நூல்கள் பல படித்ததில்லை. படியாத இவளிடம் படியாததில்லை. கல்வியும் கேள்வியும் கற்றவளில்லை, கேள்விக்கு இவளன்றி விடைகளே இல்லை. மொழிகள் பல தெரிந்தவள் இல்லை, இவளை மொழியாத மொழிகளே இவ்வுலகில் இல்லை. இன்பத்தை இவள் தீண்டியதுமில்லை, துன்பத்தைக் கண்டு துவண்டதுமில்லை. செல்வச் செழிப்பை இவள் நாடியதே இல்லை. இவள் பெற்ற அருட்செல்வத்திற்கு அளவே இல்லை.

விண்ணேற்பு என்பது அன்னைக்கு மட்டுமல்ல அன்னையைப் போல் வாழும் ஒவ்வொருவருக்கும் அப்பேறு உண்டு. மரியாவின் விண்ணேற்பு நமது மகிமைக்கு முன்னடையாளமாகவும் சாசனமாகவும் விளங்குகிறது.

இன்றைய நன்னாளில் நம் நாட்டின் விடுதலைக்காகப் போராடி தம் இன்னுயிரை ஈந்த உத்தமர்களை போற்றி அவர்களை பெருமைப்படுத்துவோம். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம்.

*நாட்டில் செருக்குடன்*
*சிந்திப்போரை சிதறடிப்பார்*
*நாட்டின் நலத்திற்கும்*
*ஒற்றுமைக்கும் பங்கம் செய்வோரை*
*அரியணையிலிருந்து தூக்கி எறிவார்*
*தாழ் நிலையில் இருப்போரை*
*உயர்த்துவார்*
*பசித்தோரை நலன்களால்*
*நிரப்புவார்*
*என்று மரியாளின்*
*விடுதலை கீதத்தை*
*நாட்டின் நலனுக்காய்*
*நம் வேண்டுதலாய்*
*இறைவன் முன் வைப்போம்.*



மரியாளின் மகிமை நமது மகிமை. மரியாளின் மகிழ்ச்சி நமது மகிழ்ச்சி. மரியாள் எங்கே எப்படி இருக்கிறாளோ அங்கே அப்படி நாமும் இருப்போம் என்ற நம்பிக்கையுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

மரியாள் அலகையின் தலையை நசுக்கி அரசியாகி அரியணை அமர்வாள் என்ற சத்தியத்தை இன்றைய முதல் வாசகம் நமக்கு உணர்த்துகிறது. ஆதவனை ஆடையாக அணிந்து, சந்திரனை காலணியாகக் கொண்டு பன்னிரு ஜீவ தாரகைகளை முடியாகச் சூடிய பெண் மணியாய் மரியாளை வர்ணிக்கும் கவித்துவமிக்க இவ்வாசகத்தை களிப்புடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் கிறிஸ்தவத்தின் அடித்தளமாய் இருக் கிறது. இயேசு கிறஸ்து ஆத்ம சரீரத்துடன் விண்ணிலே வீற்றிருப்பது போல, மரியாளும் சாவை வென்று விண்ணக வீட்டில் ஆத்ம சரீரத்துடன் வாழ்கிறார். நாமும் அவர்களைப் போல் விண்ணேற்ற மடைந்து அவர்களுடன் வாழ்வோம் என்ற பேருண்மையை உணர்த்துகிற இவ்வாசகத்தை நம்பிக்கையுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. விடுதலையின் ஆண்டவரே, இறைவா, இறை வார்த்தைகளையும், வாழ்க்கை நன்னெறிகளையும் மக்கள் நெஞ்சங்களில் விதைத்து, அவர்களை விண்ணகப் பாதையில் வழி நடத்தி வரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்கள் பணிகளை முழு மனச் சுதந்திரத்தோடும், அர்ப்பணிப்போடும், தூய ஆவியாரின் ஆற்றலோடும் நிறை வேற்ற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்தையும் ஆண்டு வழி நடத்தும் அன்பு இறைவா, வியப்புக் குரிய உம் அருட்கொடைகளை எங்களுக்கு நிறைவாக அளித்து, எங்கள் உள்ளமெல்லாம் மகிழ்வுறச் செய்யவும், விண்ணேற்படைந்த மரியன்னையின்மீது நாங்கள் கொண் டுள்ள உண்மையான பக்தி எங்களை முழுமையான விடுதலை வாழ்வுக்கு இட்டுச் செல்லவும், எங்கள் தாய் நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்டு அதன் முன்னேற்றத்திற் காகத் தன்னலமின்றி உழைக்கவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தாழ்வுற்றோரை மேன்மைப்படுத்தும் இறைவா, சமுதாயத்தால் புறக்கணிக் கப்பட்ட, ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களுக்காக உம்மை மன்றாடு கின்றோம். தூய கன்னி மரியாளின் தாழ்நிலையைக் கண்ணோக்கி உம் திருமகன் மனிதராக அவரிடமிருந்து பிறக்கும் அருளை அளித்ததைப்போல், அவர்கள் மேலும் உம் திருவருளை பொழிந்து அவர்களையும் மேன்மைப் படுத்தும். அவர்கள் சகல உரிமை களையும் பெற்று, சமத்துவ அந்தஸ்தை அடைந்து, சக மனிதர்களாக நடத்தப் பட, அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எம் மகிழ்ச்சியும், எம் புதையலுமாய் உள்ளவரே எம் இறைவா! உம்மிடம் நாங்கள் பெற்ற ஆன்மீக மற்றும் பொருளாதார வளங்களை மற்றவர் களுடன் பகிர்ந்து, நன்மைகள் செய்யும் தாராளமான மனத்தினைத் தருமாறும், மரியாளைப் போல தாழ்ச்சியிலும், இறை நம்பிக்கையிலும் சிறந்து விளங்கவும் அருள் வரம் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## 1.பாயிரவியல்
## 1.கடவுள் வாழ்த்து

**குறள் -6**

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்**

### குறள் விளக்கம்

ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலைபெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.

### சிந்தனை

அறிவியல் வெளிநோக்கியது: ஆன்மீகம் உள்நோக்கியது. புறப்பார்வையை அகற்றி அகப்பயணம் செய்தால் ஒழுக்க நெறியில் நீண்ட நாள் வாழ முடியும். ஐம்பொறிகளும் உலக இன்பங்களை உள்ளத்திற்குள் கொண்டு வருபவை. கண்ணைமூடி தனக்குள் பிரயாணம் செய்து ஆன்ம வாழ்வை மனிதன் நோக்க வேண்டும்.

லீல்கிப்ரானுடைய இந்த கதை ஆழமானது. ஒரு நகரத்தில் நாய் ஒன்று இருந்தது. அது திடீரென்று மெய்ஞானமடைந்தது. மற்ற நாய்களிடம் குரைப்பதை நிறுத்துங்கள். தேவையில்லாமல் குரைப்பதாலேயே நம் ஆற்றலில் பெரும்பகுதி வீணாகிவிடுகிறது என்று போதனை செய்தது. ஆனால் குரைப்பதை நிறுத்துவது நாய்களுக்கு கடினமாக இருந்தது. அவை அந்த அறிவுரை வழங்கிய நாயிடம் விளக்கமளித்தன. நீங்கள் ஒரு மாபெரும் நாய். நீங்கள் சொல்வது எல்லாம் மெய் தான். ஆனால் நாய்கள் எங்களால் மௌனமாக தியானம் செய்ய முடிவதில்லை என்றன. தன்னைப் போல் சாதாரண நாய்களால் செய்ய இயலவில்லை என்பது அறிவுஜீவி நாய்க்கு மகிழ்வைத் தந்தது. சில நாட்களுக்கு பின் பிற நாய்கள் முடிவெடுத்து ஒரு நாள் குரைக்காமல் இருந்தன. அறிவுஜீவி நாய்க்கோ எந்த நாயும் குரைக்காமல் இருப்பது ஆச்சர்யம் அளித்தது. பின் ஓர் இருண்ட மூலைக்கு சென்று குரைக்க ஆரம்பித்தது. அதனை தொடர்ந்து எல்லா நாய்களும் குரைக்க ஆரம்பித்தன. அறிவுஜுவி நாய் மீண்டும் போதிக்க ஆரம்பித்தது.

இக்கதையில் தவறான எண்ணத்தோடு அறிவுஜீவி நாய் மற்ற நாய்களுக்கு வழிகாட்டுகிறது. குரைப்பது என்ற பொறியை அடக்கி ஆற்றலை பெருக்கு என்ற அறிவுஜீவி நாய் போதித்த போதனை சரியானது. ஆனால் அப்போதனையை பிற நாய்கள் கடைபிடிப்பதை அது விரும்பவில்லை. தங்கள் பலவீனத்தை கட்டுப்படுத்தி அவை முயற்சிகள் மேற்கொள்வதையும் அது விரும்பவில்லை.

மாற்கு நற்செய்தி இயல் 9 இறைவார்த்தைகள் 42 முதல் 47ல் இறைமகன் இயேசு, என் மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஓர் எந்திரக் கல்லைக் கட்டி கடலில் தள்ளி விடுவதே அவர்களுக்கு நல்லது. உங்கள் கை உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு கையுடையவராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப்படுவதைவிட, கை ஊனமுற்றவராய் நிலை வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. உங்கள் கால் உங்களை பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு காலுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட கால் ஊனமுற்றவராய் வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை பிடுங்கி எறிந்து விடுங்கள். நீங்கள் இரு கண்ணுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட ஒற்றைக் கண்ணுடையவராய் இறையாட்சிக்கு உட்படுவது உங்களுக்கு நல்லது என்கின்றார்.

நமது நல்வாழ்வுக்கு இடறலாய் இருக்கும் பொறிகளை இறைமகன் இங்கு வரிசைப்படுத்துகின்றார். கை, கால், கண் என அங்க அவயங்களை வரிசைப்படுத்திவிட்டு அவை இல்லாதிருப்பதே நலம் என்கிறார். அகப்பயணத்தில் ஆர்வம் காட்டி நீடு வாழ்வோம்.



# வத்திக்கான் செய்திகள்


சுகாதாரப் பாதுகாப்பில் பாகுபாடு காட்டாததை வலுப்படுத்துதல் என்ற நோக்கில், அமெரிக்க ஜனாதிபதி பிடன் நிர்வாகம் பாலின மாற்ற நடைமுறைகளைச் செய்ய சுகாதாரப் பணியாளர்களை கட்டாயப்படுத்த வேண்டும். சுகாதார காப்பீடு வழங்குநர்கள் அவற்றைக் காப்பீடு செய்ய வேண்டும். மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்புகளை செய்வதற்கான ஆணையை மதிக்க வேண்டும், என்று ஒரு முன்மொழியப்பட்ட விதியை அறிவித்தது. ஆனால், அமெரிக்க கத்தோலிக்க ஆயர்களின் அமெரிக்க மாநாடு அதற்கு தன் எதிர்ப்பைக் காட்டியுள்ளது. எலும்பு உடைந்தாலும் அல்லது புற்றுநோயாக இருந்தாலும் சரி, திருநங்கைகள் என அடையாளம் காணும் நோயாளிகள் உட்பட அனைத்து நோயாளிகளுக்கும் கத்தோலிக்க மருத்துவமனையில் சிறந்த பராமரிப்பு வழங்கப்படும் என்று வலியுறுத்தினார்கள். ஆரோக்கியமான உடல் உறுப்புகளை அகற்றுவதற்காக வாழ்க்கையை மாற்றும் அறுவை சிகிச்சைகளைச் செய்ய சுகாதாரப் பணியாளர்களை அவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். இது மத சுதந்திரம் மற்றும் மோசமான மருத்துவத்தை மீறுவதாகும் என்று ஆயர்கள் மேலும் எச்சரித்தனர். உத்தேச விதிமுறைகள் சுகாதாரப் பணியாளர்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக கருக்கலைப்பு செய்யும்படி கட்டாயப்படுத்த வேண்டுமா அல்லது வேலையை இழக்க வேண்டுமா என்பதை பரிசீலித்து வருவதாகவும் அறிவிக்கிறது.

உலக மற்றும் பாரம்பரிய மதங்களின் தலைவர்களின் 7வது மாநாட்டில் பங்கேற்பதற்காக போப் பிரான்சிஸ் செப்டம்பர் மாதம் கஜகஸ்தானுக்கு பயணம் மேற்கொள்கிறார் என்று ஆகஸ்ட் 1 அன்று வத்திக்கான் அறிவித்தது. செப்டம்பர் 13 முதல் 15 வரை கஜகஸ்தான் தலைநகர் நூர் சுல்தானில் பல நிகழ்வுகளில் அவர் கலந்துகொள்கிறார்.

பெருந்தொற்று நோய்க்குப் பிறகு மனிதகுலத்தின் சமூக-ஆன்மீக வளர்ச்சிக்கு மதத் தலைவர்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மாநாட்டில் சேர போப் பிரான்சிஸ் இந்த பயணத்தை மேற்கொள்வார்.

இத்தகைய மாநாடு முன்னாள் கசாக் அதிபர் நூர்சுல்தான் நசர்பேவ் அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு முன்முயற்சியாகும். அவர் 1986 ஆம் ஆண்டு உலக பிரார்த்தனை தினத்தில் போப் முதலாம் ஜான் பால் காட்டிய முன்மாதிரியால், ஈர்க்கப்பட்டதாகக் கூறினார்.

போப் பிரான்சிஸ் ஆகஸ்ட் 5 அன்று ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சர்ச்சின் தலைமை வெளி விவகார அதிகாரியான மெட்ரோபொலிட்டன் அந்தோனியை சந்தித்தார் - இதன் மூலம் போப்பாண்டவர் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் தேசபக்தர் கிரில் உடன் செப்டம்பரில் ஒரு உச்சி மாநாட்டை திட்டமிடலாம் என்ற ஊகத்தை தூண்டியது. காங்கிரசிலும் கலந்து கொள்வார்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 20-ம் ஞாயிறு - 14.08.22

### 14.08.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : எரேமியா 38:4-6, 8-10
இரண்டாம் வாசகம் : எபிரேயர் 12:1-4
நற்செய்தி : லூக்கா : 12:49-53

### 15.08.2022 – திங்கட்கிழமை

புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா
இந்தியாவின் பாதுகாவலர்
இந்தியாவின் 75வது சுதந்திர நாள்

**முதல் வாசகம் :** திருவெளிப்பாடு 11:19, 12:1-6, 10
**இரண்டாம் வாசகம் :** 1 கொரிந்தியர் 15:20-26
**நற்செய்தி :** லூக்கா 1:39-56

### 16.08.2022 – செவ்வாய்க்கிழமை

**முதல் வாசகம் :** எசேக்கியேல் 28:1-10
**நற்செய்தி :** மத்தேயு 19:23-30

### 17.08.2022 – புதன்கிழமை

**முதல் வாசகம் :** எசேக்கியேல் 34:1-11
**நற்செய்தி :** மத்தேயு 20:1-16

### 18.08.2022 – வியாழக்கிழமை

**முதல் வாசகம் :** எசேக்கியேல் 36:23-28
**நற்செய்தி :** மத்தேயு 22:1-14

### 19.08.2022 – வெள்ளிக்கிழமை

**முதல் வாசகம் :** எசேக்கியேல் 37:1-14
**நற்செய்தி :** மத்தேயு 22:34-40

### 20.08.2022 – சனிக்கிழமை

**முதல் வாசகம் :** எசேக்கியேல் 43:1-7
**நற்செய்தி :** மத்தேயு 23:1-12



I am not capable of doing big things, but I want to do everything, even the smallest things, for the greater glory of God.


St. Dominic Savio



# திருவிவிலியமும் திருக்குறளும்

## வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

அதிகாரம் 15

பிறனில் விழையாமை

குறள் – 146

**பொருள்:** பகை, பாவம், அச்சம், பழி என்னும் இந்நான்கு குற்றங்களும் பிறன் மனைவியிடத்துஇ நெறி தவறி நடப்பவனிடத்திலிருந்து நீங்காவாம்.பிறனில் விழையாமை – பிறனுடைய மனைவியை விரும்பாமையே பிறன் இல் விழையாமை என்று வள்ளுவர் சுட்டுகிறார். இல் என்றால் இல்லத்திற்குரிய இல்லாளை அதாவது இல்லத்தரசியை இங்குச் சுட்டுகிறது. விழைவு என்றால் விரும்புதல் என்று பொருள். பிறன் மனைவியை விரும்பாதவர்களின் சிறப்பும், பிறன் மனைவியை விரும்புகிறவர்களின் இழிவும் பற்றி வள்ளுவர் பல கருத்துக்களை இவ்வதிகாரத்தில் வழங்கியுள்ளார்.

இல்வாழ்க்கையில் ஈடுபட்டவனது முதல் உரிமைப் பொருளாக, உயிராக கருதப்பட்டது யாதெனில் இல்வாழ்க்கை துணையாகிய அவனுடைய மனைவி. இல்லாளாகிய மனைவியை மையமாகக் கொண்டே இல்வாழ்க்கை அமையும். எனவே ஒருவனது மனைவி அவனோடு நிரந்தரமாக ஈர் உயிர்: ஓர் உடல் போல் வாழ்வதையே இல்வாழ்க்கையின் பெரும் பயன் என்று பண்டைத் தமிழ்ச் சமுதாயம் கருதியது. இதில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டாலும் குடும்பம் சிதைந்து விடும் என்று நம்பியது. அதனால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபை வலியுறுத்தியது. எனவே பிறன் மனைவியை ஒருவன் விரும்புவதை பெரிய குற்றமாகத் தமிழ்ச் சமுதாயம் எண்ணியது. அந்த எண்ணத்தைத் தான், பிறனில் விழையாமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கிக் கூறியுள்ளார்.

இராமாயணத்தில் இடம்பெறும் இலங்கை அரசன் இராவணன். அவன் மிகச் சிறந்த இசை வல்லுநன்; சிறந்த ஆட்சியாளன்; சிறந்த வீரன்; நற்குணங்களை கொண்டு அரசாண்ட புகழ் மிகுந்த அரசன். ஆனால் இராமனின் மனைவி சீதையை விரும்பினான் என்ற ஒரு நிகழ்வால், அவன் குற்றம் பழி பாவம் அனைத்தும் அடைந்தது மட்டுமல்லாமல் தன் உயிரையும் இழந்தான்.

பிறனில் விழைதல் என்ற ஒன்று பிற எல்லா சிறப்புகளையும் மறைத்துவிடுகிறது. இழக்க செய்துவிடுகிறது. எனவேதான் வள்ளுவர் பெருமைகள் பல ஒருவன் பெற்றிருப்பினும் ஆற்றல்கள் பல அமைந்திருப்பினும் பிறனில் விழைதல் என்ற ஒரு குறை இருக்குமானால் அவனது பெருமைகளும் ஆற்றலும் ஒன்றுமில்லாமல் போய்விடும். அவற்றால் அவனுக்கு எந்த பயனும் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

பிறன் மனைவியை நோக்காத பேராண்மை அறச் செயல் மட்டுமன்று; உயர்ந்த ஒழுக்கமும் ஆகும். எச்சூழ்நிலையிலும் பிறன் மனைவியை விரும்பாதீர்கள்; நோக்காதீர்கள் என்று ஆணித்தரமாக இறைவனும் நமக்கு எச்சரிக்கை விடுக்கிறார்.

அழகான பெண்ணிடமிருந்து உன் கண்களைத் திருப்பிக்கொள்; பிறன் மனைவியின் அழகை உற்றுநோக்காதே. பெண்களின் அழகால் பலர் நெறி பிறழ்ந்துள்ளனர்; இதனால் காமம் தீயெனப் பற்றியெரியும்.(சீராக்கின் ஞானம் 9:8)

அழகு என்றால் இனிமை. ஒன்றின் அல்லது ஒருவரின் நிறம் நேர்த்தி வடிவம் கண்கள் விரும்பும் வகையில் ஈர்த்து மனதில் மகிழ்ச்சியை தோன்றுவது அழகு. அழகை விரும்பாதவர் எவருமே இவ்வுலகில் இல்லை. ஆனால் கிமு 180 ஆம் நூற்றாண்டின் காலக்கட்டத்தில் சீராக்கின் ஞானம் நூலில் அழகான பெண்ணிடம் இருந்து உன் கண்களைத் திருப்பிக் கொள் என்று தூய ஆவியாரால் எச்சரிக்கப்படுகிறது. அழகான எவற்றைப் பற்றியும் கூறாமல் அழகான

பெண்ணைப் பற்றி மட்டும் கூறி அவளிடமிருந்து கண்களைத் திருப்பிக் கொள் என அறிவுறுத்தப்படுகிறது. முதல்பார்வை தவறில்லை; ஆனால் இரண்டாம் பார்வையே தீமையை தரும் என்பர். ஏனெனில் உடலுக்கு ஒளியாக இருப்பது கண்கள் என்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே கூறியிருக்கிறார்.

கண்தான் உடலுக்கு விளக்கு. கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும். அது கெட்டுப் போனால் உங்கள் உடல் முழுவதும் இருளாய் இருக்கும். ஆக. உங்களுக்கு ஒளி தரவேண்டியது இருளாயிருந்தால் இருள் எப்படியிருக்கும்! (மத்தேயு நற்செய்தி 6:22-23)

எனவே கண்கள் வழியாகவே பாவம் வந்துவிடும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் தங்கள் பார்வையைக் காத்துக் கொள்ள வேண்டும். திருவிவிலியத்தில் கணவன்மார்களுக்காக அறிவுறுத்தப்பட்டிருக்கும் சில வசனங்கள்:

திருமணமான ஆண்களே உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப் படுத்தாதீர்கள். (கொலோசையர் 3:19)

திருமணமான ஆண்களே உங்கள் மனைவியர் வலுக்குறைந்தவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து அவர்களோடு இணைந்து வாழுங்கள். வாழ்வுதரும் அருளுக்கு உடன் உரிமையாளராக இருப்பதால் அவர்களுக்கு மதிப்புக் கொடுங்கள். அப்போதுதான் நீங்கள் தடையின்றி இறைவேண்டல் செய்ய முடியும். (1பேதுரு 3:7)

உன் காதல் மனையாளைப் பார்த்துப் பொறாமைப்படாதே; (சந்தேகப்படாதே) உனக்கே தீங்கு விளைவிக்கும் தீய பழக்கங்களை அவளுக்குச் சொல்லிக்கொடாதே. ஒரு பெண்ணுக்கு நீ அடிமையாகாதே;

இல்லையேல் அவள் உன்னையே அடக்கியாள நேரிடும்.
நெறிகெட்டவளை அணுகிச் செல்லாதே;
அவளது வலைக்குள் வீழ்ந்திடுவாய்.
பாடகியுடன் உனக்குத் தொடர்பு வேண்டாம்.
அவளது மயக்கும் வலையில் சிக்கிக்கொள்வாய்.
கன்னிப்பெண்ணை உற்று நோக்காதே;
நீ தடுமாறி அவளால் தண்டனைக்கு ஆளாவாய்.
விலைமாதரிடம் உன் உள்ளத்தைப் பறிகொடாதே;
உன் உரிமைச் சொத்தை நீ இழக்க நேரிடும்.
(சீராக்கின் ஞானம் 9:1-6)

ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் கணவன்மார்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். பெண்கள் கட்டுப்பாடும் கற்பும் உள்ளவர்களாய் வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்பவர்களாய் தங்கள் கணவருக்கு பணிந்து இருக்க வேண்டும் என தீத்து நிருபத்தில் 2:5 இல் அறிவுறுத்தப்படுகிறது. ஆண் பெண் என்ற பேதமில்லாமல் அனைவரையும் காக்கும் ஆண்டவருக்கு நாம் உண்மையாக ஒவ்வொருவரும் வாழ வேண்டும்.

உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களை கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள். (மத்தேயு 5: 16).

*இயேசுவுக்கே புகழ்*

– லீமா விக்டோரியா

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்